# வலிஅறுப்பு நாடகத்தில் திருநங்கையர்களின் வலி

**அ.நாகஜோதி**
**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி , (தன்னாட்சி)**
**மதுரை - 625018. nagajothia1212@gamil.com**

32

**ஆய்வுச்சுருக்கம்**

நாடக உலகில் மிகச் சிறந்த நாடக அறிஞரான மு.ராமசாமி அவர்கள் நவீன நாடகங்களை நிஜ நாடகங்களாக இயக்கியவர். அவரின் நிஜநாடகங்களில் ஒன்று ‘ரௌத்திரம் பழகு’ என்ற நாடகத் தொகுப்பில் இடம்பெறும் ‘வலி அறுப்பு’ என்னும் நாடகம் ஆகும். சமூகத்தில் திருநங்கைகளின் மனவலிகளுக்கு மருந்தாக, அகற்றப்பட வேண்டிய வலிகள் குறித்து ஆராய்வதே இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள்**

1. வலி அறுப்பு
2. திருநங்கை
3. ஆக்கிணைகள்
4. புறக்கணிப்பு
5. மனவலி
6. வலி அறுக்கும் மருந்து

**முன்னுரை**

தமிழ் இலக்கியமானது பல்வேறு காலங்களில் பல்வேறு வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. இலக்கிய வகைகளுள் ஒன்றான நாடகம் பழங்காலத்தில் இருந்து இன்று வரை பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்று வருகின்றது. நாடகங்கள் மக்களின் மத்தியில் சமூகத்திற்குப் பல்வேறு சிந்தனைகளை விதைக்கின்றன. இன்றைய சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கின்ற திருநங்கையரின் அவலங்களையும் வலிகளையும் நம் கண்முன்னே வலி அறுப்பு என்னும் நவீன நாடகமாக நாடகத்தைப் படைத்துள்ளார் மு.ராமசாமி அவர்கள். இந்நாடகத்தில் இடம்பெறும் திருநங்கையர்களின் வாழ்க்கையில் ஏற்படும் வலிகள் குறித்த செய்திகளை ஆய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**திருநங்கையர்களின் வாழ்வில் ஏற்படும் வலி**

திருநங்கையர்களின் மனவலியை அறுத்தெறிய வேண்டும். வாழ்க்கையில் சக மனிதர்களோடு மனிதர்களாய் மதிப்பு மிக்கவர்களாக வாழ வேண்டும். திருநங்கையர்களின் மன எண்ணங்களை, கனவுகளை புறந்தள்ளக்கூடாது. சமூகத்தில் அவர்களின் வலிகளுக்கு மருந்தாகச் செயல்பட வேண்டும் என்பதே நாடகத்தின் கருவாக அமைகின்றது.

**பிறப்பால் ஏற்படும் வலி**

பிறப்பின் அடிப்படையில் ஆண், பெண் என்னும் இரு பாலினம் மட்டுமே உண்டு. ஆனால் இவர்கள் ஆணின் உடலில் பெண்மை போர்த்தி இருக்கிறார்கள். கருவறையில் இருக்கும் போது முதல் ஆறுவாரங்களுக்கு எல்லாருமே பெண்ணாகவே இருப்பர். X Y என இரண்டு குரோமோசோம்களில் X X சேர்ந்தால் பெண். X Y சேர்ந்தால் ஆண். இந்தச் சேர்க்கையில் ஏற்படும் சிறு குறையில் தான் மூன்றாம் பாலின உருவாக்கம் அடங்கியிருக்கிறது என்ற அறிவியல் செய்தி விதைக்கப்பட்டதை இந்த

நாடகத்தின் வழியாக அறியமுடிகின்றது.

இவர்கள் திருநங்கையர்களாக மாறியதற்கு அவர்களின் பெற்றோர்கள் காரணமில்லை. பெற்றோர்களின் குரோமோசோம்கள் தான் காரணமாக அமைகின்றன என்று நாடகத்தில் இடம்பெறும் திருநங்கையின் குரலானது இச்செய்தியை விளக்குகின்றது.

**பெற்றோர்களால் ஏற்படும் வலி**

திருநங்கையர் ஒடுக்கப்படுவது என்பது முதன் முதலில் குடும்பத்திலிருந்து தான் ஆரம்பமாகின்றது. பெற்றோர்கள் அவர்களை அரவணைக்காததால் வீட்டை விட்டு வெளியேறுகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்நாடக அரங்கில் திருநங்கையின் குரலாக,

> **"தீராதா வலி . . . தீராதா வலி . . . நெஞ்சில் மாறாத வடுவாய் இன்னமும் பதிந்திருப்பது . . . அர்த்தநாரியாய் ஆணுக்குள் பெண்ணாய் நாங்கள் அலைக்கழிந்த அந்த வயதில், எங்கள் பெற்றோர் எங்களை ஏறெடுத்தும் பாராதுதான்! விளக்குமாறெடுத்துத் துரத்தியது தான்! . . . பிறப்பே பகையாச்சு . . . இருப்பே நெருப்பாச்சு!" (வ.அ.,ப.53)**

என்று வருவது அவர்களின் வேதனைக் குரலாக ஒலிப்பதைக் காணமுடிகிறது. பெற்றோர்களுக்கு அவமானமாக இருப்பதால் என்னை வீட்டை விட்டுத் தூரத்தி விட்டனர் என்று நாடகத்தில் இடம்பெறும் கதை சொல்லியான திருநங்கை குறிப்பிடுகிறார்.

பெற்றோரே அவர்களுக்கு ஆதரவு தராத காரணத்தால் அவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். அன்பிற்காகவும், அரவணைப்பிற்காகவும் ஏங்குகின்றனர் என்பதை,

> **"ஒத்தையாக வாழ முடியுமா? – நமக்கு**
> **உற்றதுணை ஒன்று வேண்டாமா?**
> **ஒத்தையிலே வாழ முடியுமா? – நமக்கு**
> **உற்றதுணை ஒன்று வேண்டாமா?**
> **பெத்தவர்கள் ஆறுதல் ஆனால் – இங்கு**
> **பிரிந்து வாழும் தேவை இல்லையே!" (வ.அ.,ப.54)**

என்று நாடகத்தில் இடம்பெறும் பாடல்களின் வழியாக அறியமுடிகிறது. திருநங்கையர்களுக்கான வலியும் தேடலும் பெற்றோர்களிடம் இருந்து தான் ஆரம்பமாகின்றன என்பதை இந்நிகழ்வு எடுத்துரைக்கிறது.

**சமூகத்தால் ஏற்படும் வலி**

குடும்பத்தால் புறக்கணிக்கப்படும் திருநங்கைகளை சமூகமும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இவர்களை இச்சமூகம் கீழ்த்தரமாகவே பார்க்கின்றது. இதனால் இவர்கள் தனித்து விடப்படுகின்றனர். தம் வாழ்க்கையில் பல்வேறு அவமானங்கள், வலி வேதனைகளுக்கு ஆளாகின்றனர்.

நாடகத்தில் இடம்பெறும் திருநங்கை சாலையில் தனியாகச் சென்று கொண்டிருக்கும் போது குடிகாரன் ஒருவனால் அவமானப்படுத்தப்படுகிறார். குடிகாரன் திருநங்கையைப் பார்த்து "ஏய் ஒம்போது" என்றழைக்கிறான்.

அதோடன்றி, அந்தக் குடிகாரன் திருநங்கையின் சேலையைப் பிடித்து இழுத்த போது பாஞ்சாலியாய் காவலரே கதியென்று கதறினாள் திருநங்கை. ஆனால் காவலரும் கண்டு கொள்ளவில்லை. இந்நிகழ்வைக் குறித்துக் கூறுகையில்,

**“காவலரிடம் ஓடினேன் . . . ஒட்டுத் துணியாய் என்னை அலட்சியப்படுத்தினார். கத்தினேன் . . . ஒரு கணம் . . . ஓரே கணம்!” (வ.அ.,ப.58)**

என்று திருநங்கையின் உணர்வைப் பதிவிடுகிறார்.

சமூகத்தின் மீது தனக்கு இருக்கும் கோபத்தை வெளிப்படுத்த, தன்னைத் தானே ஆயுதமாக நிர்வாணமாக்கிக் கொள்ளும் சூழலை,

**“இந்தச் சமூகத்தின் மேலான என் ஆத்திரத்தை அம்பலப்படுத்த என் கைக்கு அப்போது கிடைத்த ஒரே ஆயுதம் என் நிர்வாணம்” (வ.அ.,ப.59)**

என்ற உரையாடல் விளக்கும்.

என் நிர்வாணத்தால் அதிர்ந்து போன காவலர் அடிக்க வந்தார். என் நிர்வாணத்திலிருந்து நெருப்புப் பொறி பறந்தது. அவமானத்தில் காவலன் குடிகாரனை அடித்து விரட்டிவிட்டான்.

**“ஏன்? ஏன்? ஏன்? எங்களுக்கு மட்டும் இது நிகழ்கிறது” (வ.அ.,ப.59)**

என்று இச்சமூகத்தால் திருநங்கையர்களுக்கு ஏற்படும் அவமானத்தை, மனவலியை இந்நாடகம் எடுத்துரைக்கின்றது.

**திருநங்கையர்களின் வலியை அறுக்கும் மருந்து**

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட திருநங்கையர்களுக்கு அன்பும் ஆதரவும் மிகத் தேவையாகிறது. பறவைகளாகச் சிறகு விரித்து பறக்க நினைக்கும் இவர்கள் சமூகத்தின் வலியை அனுபவிக்கின்றனர். நாடக அரங்கில் திருநங்கையரின் குரலானது, ‘வலிகள் தான் எங்களுக்கான சொத்து’ என்பதை,

**“வலி . . . வலி . . . வலியை . . . மட்டுந்தான் எங்கள் வாழ்க்கையில் சொத்தாகச் சேர்த்திருக்கிறோம்” (வ.அ.,ப.60)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

இச்சமூகமானது சக மனிதர்களாக அவர்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். அவர்களின் வலியைத் தம் வலியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். வலியை அறுத்தெடுக்கும் மருந்தாகவே சமூகம் செயல்பட வேண்டும். அவர்களின் உரிமைக்காக, சுதந்திரத்திற்காக, பாதுகாப்பிற்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

நாடகத்தில் இடம்பெறும் மற்றொரு குரலானது திருநங்கையர்களின் வலிக்கு மருந்தாக ஒலிப்பதை,

**“மானமும் அறிவும் மட்டுமே மனிதர்க்கு அழகு . . . எந்தச் சூழலிலும் மானத்தைப் பங்கு போட இடங்கொடுக்காதீர்கள்! அறிவால் மட்டுமே உங்களை என்றும் அழகுபடுத்திக் கொள்ளுங்கள்! அடுத்த தலைமுறைக்குத் நீங்கள் விட்டுச் செல்லும் ஆக்கிணைகளாய் அவை இருக்கட்டும் . . . எல்லா உரிமைகளும் . . . உங்களைத் தேடிவர உழையுங்கள். மாறும் என்பதே மாறாதது . . .” (வ.அ.,ப.60)**

என்று உணர்த்துகின்றது.

நாடகத்தின் அரங்கில் திருநங்கையர்களுக்கு ஆதரவாக ஒட்டு மொத்தக் குரலாக அனைவரும் வாழ்த்திசைத்துப் பாடுகின்றனர். இதனை,

**“இனி நமக்குள் பேதமில்லையென்று கூவி மகிழுங்கள் . . . வலி அறுப்பின் குலவை ஒலி உங்கள் இமை இடுக்குகளின் வழியே ஆனந்த நீராய்ப் பெருகி ஓடட்டும்!**

**வாருங்கள் . . .” (வ.அ.,ப.60)**

**“பிறப்பொக்கும் என்று சொன்ன பெருமகனைப் போற்றுவோம்!
பேதம் ஒழித்த சமுதாயம் ஆக்குவதற்கே முயலுவோம்
திருவாளர் திருமதி திருநங்கை கூடுவோம்!
திரைதேடும் இளமைக்கும் புது வழியைக் காட்டுவோம்” (வ.அ.,ப.61)**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து பால்வேறுபாடுகளற்ற சமுதாயமாக ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். இன்றைய சமூகத்தில் திருநங்கையர்களுக்கான அடையாளத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்பதை வலி அறுப்பு நாடகம் உணர்த்துகின்றது.

**முடிவுரை**

மு.ராமசாமியின் வலி அறுப்பு என்ற நாடகம் வழியாகத் திருநங்கையர் வாழ்வில் ஏற்படும் மனவலிகளை மக்களுக்குப் புரியும் வகையில் ஆழமான கருத்துகளாக எடுத்துரைக்கின்றார். திருநங்கையர்களுக்கான வலியை சமூகத்தின் வலியாக அறுத்தெடுக்க வேண்டும் என்பதை இந்நாடகம் சித்தரிப்பதை அறியமுடிகின்றது. திருநங்கையர் பிறப்பதற்குக் காரணம் அவர்களின் குரோமோசோம்கள் தான் என்பதை நாடகத்தில் இடம்பெறும் அறிவியல் செய்தியாக காணலாம். திருநங்கையர்களையும் பால்வேறுபாடற்ற சக மனிதர்களாகப் பாவிக்க வேண்டும் என்னும் கருத்தை அறியமுடிகின்றது. திருநங்கையர்களிடம் காணப்படும் அறிவை மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும். அதுவே அவர்களை போன்ற அடுத்தத் தலைமுறைக்கும், அவர்களுக்கான உரிமைகளுக்கும், உழைப்பிற்கும் புதிய நல்வாழ்வை ஏற்படுத்தும் மறுமலர்ச்சிக் காரணிகளாக இருக்கும் என்பதை இந்நாடகம் உணர்த்துவதன் வழி அறியமுடிகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

**முதன்மை ஆதாரம்**

1. ராமசாமி.மு, ரௌத்திரம் பழகு , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600 098. முதல் பதிப்பு, மார்ச், 2015.

**துணைமை ஆதாரங்கள்**

1. அய்யப்பன்.கி, அரவாணிகள் அன்றும் இன்றும், விசாலட்சுமி பதிப்பகம், சென்னை - 5. முதல் பதிப்பு, அக்டோபர் 2011.
2. மகாராசன், அரவாணிகள் - உடலியல்-உளவியல்-வாழ்வியல், தோழமை வெளியீடு, சென்னை-78. முதல் பதிப்பு,